**OS.NO: 22/2024**

**PW1 :** மல்லிகா, க/பெ.ஆறுமுகம்

நாள் : 12.02.2026

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

நான் ஏற்கனவே இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன். நான் M.A படித்து தலைமை ஆசிரியராக பணிபுரிந்து பணி ஓய்வில் உள்ளேன். எனக்கு ஆங்கிலம் சரளமாக எழுதப் படிக்கத் தெரியும்.

17.10.2014 அன்று எனது தந்தை எனது தாயார் பெயருக்கு எழுதிவைத்த உயில் ஆவணத்தின் அசலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணம் தாவா சொத்து சம்மந்தப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

மேற்படி உயில் ஆவணத்தில் எனது தாயார் தாவா சொத்தை அவரது காலம் வரை அனுபவித்து அதற்கு பின்பு பிரதிவாதியின் வாரிசு தாரர்கள் ஆண்டு அனுபவிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி உயில் ஆவணம் எழுதிய பிறகு என்னுடைய பாதுகாப்பில் தான் இருந்தது என்று சொன்னால் தற்போது தான் நான் அதனை கண்டுப்பிடித்தேன்.

மேற்படி உயிலை 23.01.2015 அன்று இரத்து செய்து விட்டதாக ரத்து ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதுவும் அசல் ஆவணம் தான். அதையும் எனது தரப்பில் தான் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அதனால் மேற்படி ஆவணங்களை பிரதிவாதி அவருடைய எதிருரையில் மறைத்துவிட்டார் என்று கூறுகின்ற விவரமே தவறு என்றும், மேற்படி உயில் ஆவணம் ரத்து செய்த விவரமே பிரதிவாதிக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, அவருக்கு தெரியும்.

நானும், என்னுடைய தந்தை, சகோதரர் மற்றும் சகோதரிகள் சேர்ந்து ஒரு இந்து குமாருக்கு 22.02.2021 அன்று ஒரு கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்ததாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அது தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்டது இல்லை என்று சொன்னால் சரிதான். என் அப்பாவுக்கு மனநிலை சரியில்லை என்று பிரதிவாதி கூறியுள்ளதால் மேற்படி கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன்.

என்னால் தாக்கல் செய்யப்பட்ட வாதசாஆ.13 அசல் ஆவணம் என்று சொன்னால் சரிதான். அது யாருடைய பாதுகாப்பில் இருக்க வேண்டும் என்றால்

இந்து குமார் வசம் தான் இருக்க வேண்டும். வழக்கிற்காக நான் வாங்கி வந்தேன். மேற்படி இந்து குமாரை எனது தரப்பில் விசாரிக்க போகிறேனா என்றால் ஆமாம்.

மேற்படி ஆவணங்கள் குறித்து என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பிராதிலோ கூறவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணங்கள் தற்போது வழக்கிற்கு பயன்படும் என்பதால் தாக்கல் செய்துள்ளேன்.

நான் என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிராதில் கூறாத விவரங்களை தன்னிச்சையாக ஆவணங்களாக தாக்கல் செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல.

ஆகையால் வாதசாஆ.13 ஆவணம் இந்த வழக்கிற்கு எந்த வகையிலும் பயன்படாது என்று சொன்னால் சரியல்ல.

பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அறிவிப்பு அனுப்பியது நான் தான். பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பில் உயில் ஆவணப்படி தாவா சொத்தில் உரிமை கோரியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் உயில் ஆவணத்தை அவர் ரத்து செய்துவிட்டார் என்று நான் கூறும் விவரம் தவறு என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.12 17:41:24 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.